**சமூக நலம் மற்றும்**
**சத்துணவுத் திட்டத் துறை**

**புதிய அறிவிப்புகள் 2015–2016**

1. **தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு குழந்தையையும்** கண்காணித்து பாதுகாக்கும் நோக்கத்துடன் ரூபாய் 13.34 இலட்சம் செலவில் **மாநில அளவிலான குழந்தைகள் குறித்த தகவல் தொகுப்பினை ஏற்படுத்தி ஒருங்கிணைந்து செயல்படுத்துதல் (Reach Every Child and Protect – RECAP)**

மாறி வருகின்ற சூழ்நிலை மற்றும் வளரும் மாற்றங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான திட்டங்களை புதிய பரிணாமத்துடன் செயல்படுத்துதல் அவசியமாகிறது. **குழந்தைகளின் வளர்ச்சி மீது மாறாப் பற்றுக் கொண்டுள்ள தாயுள்ளம் படைத்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்** தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு குழந்தையையும் தொடர்ச்சியாக கண்காணிப்பதற்கும் குழந்தைகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு உறுதுணையாகவும் குழந்தைகள் குறித்த மாநில அளவிலான தகவல் தொகுப்பினை ( Data ) ரூபாய் 13.34 இலட்சம் செலவில் ஏற்படுத்தி கண்காணிக்க ஆணையிட்டுள்ளார்கள். இதன் மூலம் அங்கன்வாடி குழந்தைகள், அரசு, அரசு உதவி பெறும் தனியார் பள்ளி மற்றும் காப்பகங்களிலுள்ள குழந்தைகள், இடைநிறுத்தல் செய்த குழந்தைகள், இளைஞர் நீதி சட்டத்தின் கீழுள்ள குழந்தை கவனிப்பு மையங்கள், திறந்தவெளிப் புகலிடங்களிலுள்ள குழந்தைகள் மற்றும் தேசிய குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் மறுவாழ்வு பெற்ற குழந்தைகள் ஆகிய சமுதாயத்திலுள்ள அனைத்துப் பிரிவு குழந்தைகளும் கண்காணிப்பு வலைப்பின்னலுக்குள் கொண்டு வரப்படுவர்.

These announcements read by Hon'ble Minister SW&NMP DEPT. on 31.08.2015

## 2. 434 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்களுக்கு அகன்ற அலை வரிசை இணைய இணைப்பு ரூபாய் 53.93 இலட்சம் செலவில் ஏற்படுத்துதல்

மத்திய மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டு அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி வட்டார அலுவலகங்களிலிருந்து அங்கன்வாடி மையங்களின் மாதாந்திர முன்னேற்ற அறிக்கைகளை வலைதளம் மூலம் பதிவேற்றம் செய்ய வேண்டியுள்ளது. மேலும் குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் குறித்தான பல்வேறு பதிவுகளை உடனுக்குடன் மாநில மற்றும் மத்திய அரசிற்கு தெரிவிக்க வேண்டியுள்ளது. எனவே **மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி**, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட வட்டார அலுவலகங்களை மேம்படுத்துவதற்கு ஏதுவாக பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் நிறுவனம் மூலமாக 434 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலகங்களுக்கு, ஒரு திட்டத்திற்கு ரூபாய் 12425/– வீதம் அகன்ற அலை வரிசை இணைய தொடர்பு ரூபாய் 53.93 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**3. சமூக நல ஆணையரகத்தின் கீழ் செயல்படும் அரசு குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் அரசு சேவை இல்லங்களில் கண்காணிப்பு கேமிரா கருவிகள் ரூபாய் 50.40 இலட்சம் செலவில் பொருத்துதல்**

சமூக நல ஆணையரகத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் 26 அரசு குழந்தைகள் காப்பகங்களில் 3032 குழந்தைகளும், 6 அரசு சேவை இல்லங்களில் 843 பெண்கள் மற்றும் குழந்தைகளும் தங்கியுள்ளனர். இவ்வில்லங்களில் தங்கியுள்ள உள்ளுறைவோர்களுக்கு பாதுகாப்பு அளித்து அவர்களை தொடர்ந்து கண்காணிக்கவும், தமிழ்நாடு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் ( ஒழுங்குபடுத்துதல் ) விதிகள், 2015ல் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்பினை உறுதி செய்வதற்கும் **மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி** அரசு குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் அரசு சேவை இல்லங்களில் கண்காணிப்பு கேமிரா கருவிகள் ரூபாய் 50.40 இலட்சம் செலவில் பொருத்தப்படும்.

**4. சமூகப் பாதுகாப்பு இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் 21 இல்லங்களுக்கு ரூபாய் 32.00 இலட்சம் செலவில் கண்காணிப்பு கேமரா கருவிகள் வழங்குதல்**

தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் (ஒழுங்குமுறை) சட்டம் 2014–ன்படி, அனைத்து குழந்தைகள் காப்பகங்களின் நுழைவு மற்றும் வெளியேறும் வாயிலில் கட்டாயமாக ஒரு கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட வேண்டும். இதன் பொருட்டு, சமூகப் பாதுகாப்புத்துறையின் கீழ் இயங்கும் இல்லங்களான, சென்னை, இராணிப்பேட்டை, விழுப்புரம், தஞ்சாவூர், காரைக்குடி, மல்லிப்புதுார், தட்டப்பாறை, பஞ்சப்பள்ளி, ஈரோடு ஆகிய இடங்களில் உள்ள அரசினர் குழந்தைகள் இல்லங்களிலும், சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலியில் உள்ள அரசினர் கூர்நோக்கு இல்லங்களிலும், திருச்சி, சேலம், மதுரை மற்றும் கோயம்புத்துாரில் உள்ள அரசினர் மகளிர் காப்பகங்கங்களிலும், வேலுாரில் உள்ள அரசினர் வரவேற்பு இல்லம், அரசினர் மகளிர் பிற்காப்பு நிறுவனம், அரசினர் ஆடைகள் செய்யும் பயிற்சி நிறுவனம், ஆத்துார் மற்றும் மதுரையிலுள்ள அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனங்கள் ஆகிய இல்லங்களில் உள்ள குழந்தைகளின் பாதுகாப்பு நலன் கருதி **மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி** கண்காணிப்பு கேமிரா கருவிகள் ரூபாய் 32.00 இலட்சம் செலவில் பொருத்தப்படும்.

**5. சமூகப் பாதுகாப்பு இயக்ககத்தின் கீழ் உ ள்ள 32 மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர்களுக்கு ரூபாய் 16.00 இலட்சம் செலவில் மடிக்கணினி வழங்குதல்.**

இளைஞர் நீதிச்சட்டங்களை செம்மையாக செயல்படுத்துவதற்கு உறுதுணையாக மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்கள் உள்ளனர். மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் பணியானது குழந்தைகள் குறித்த ஆவணங்கள் மற்றும் அறிக்கையினை சமர்ப்பிக்கும் பணியாகும். எனவே, 32 மாவட்டங்களில் செயல்படும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்கள் மேலும் செம்மையாக பணியாற்றிட, மாவட்டந்தோறும் ஒரு மடிக்கணினி வழங்க **மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி** மடிக்கணிணிகள் ரூபாய் 16.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

These announcements read by Hon'ble Minister SW&NMP DEPT. on 31.08.2015

**6. பள்ளிச் செல்லும் வயதிலுள்ள மாணவர்களிடையே தற்கொலை எண்ணத்தை தடுக்கும் பொருட்டு ரூபாய் 22.40 இலட்சம் செலவில் அனைத்து மாவட்டங்களிலும் விளம்பரம் மற்றும் மனநல ஆலோசனை மூலமாக தடுப்பு முயற்சிகள் மேற்கொள்ளுதல்**

தற்கொலை எண்ணத்தினை வளரிளம் பருவத்திலுள்ள மாணவர்களிடையே தவிர்க்கும் பொருட்டு மாவட்டந்தோறும் 100 நபர்களை தேர்வு செய்து மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோருக்கு, தேர்வுகளுக்கு மூன்று மாதங்கள் முன்னரும் தேர்வுகள் முடிந்து 3 மாதங்கள் பின்னரும் ஆலோசனை வழங்கிட தகுந்த பயிற்சியாளர்களுக்கு பயிற்சி, தற்கொலை எண்ணங்கள், முயற்சிகள், மனச்சோர்வு மற்றும் போதைப்பொருள் பழக்கம் உள்ள மாணவர்களிடையே தற்கொலை எண்ணத்தை தடுத்து நல்வழிப்படுத்தும் நோக்கத்துடனும், வலுவான மாணவ சமுதாயத்தை உருவாக்க தளராத உறுதியுடனும் பாடுபடும் **மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 22.40 இலட்சம் செலவில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

These announcements read by Hon'ble Minister SW&NMP DEPT. on 31.08.2015

**திருமதி. பா. வளர்மதி**
சமூக நலம் மற்றும்
சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர்

These announcements read by Hon’ble Minister SW&NMP DEPT. on 31.08.2015